இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

பேதுரு அவருக்கு மறுமொழியாக, “ஆண்டவரே, நீர்தாம் என்றால் நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்” என்றார். அவர், “வா” என்றார். பேதுருவும் படகிலிருந்து இறங்கி, இயேசுவை நோக்கிக் கடல்மீது நடந்து சென்றார். அப்பொழுது பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி அவர் மூழ்கும்போது, “ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்” என்று கத்தினார். இயேசு உடனே தம் கையை நீட்டி அவரைப் பிடித்து, “நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?” என்றார். அவர்கள் படகில் ஏறியதும் காற்று அடங்கியது. படகில் இருந்தோர் இயேசுவைப் பணிந்து, “உண்மையாகவே நீர் இறைமகன்” என்றனர். (மத் 14:28-33)

# மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டத்தில் திருப்பலிக்கு அனுமதி

## ஆயர் அறிக்கை எண்: BP/2020/042

இன்று 31 "ஜுலை 2020 முதல், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மதியம் 12 மணிக்கு உங்களுடன் இணைந் திருப்பேன் என்று நம்புகிறேன். எனது அதிகாரப்பூர்வ அறிக்கைகள் F12 MJD-யின் வாயிலாக பார்க்கவும் கேட்கவும் முடியும். இந்த ஊடகம் நமது சமூக தொடர்பு அலுவலகத்தால் நிர்வகிக்கப் படுகிறது. இன்று, இந்த அதிகாரப்பூர்வ அலைவரிசையை 4 முக்கியமான அறிவிப்புகளுடன் தொடங்குகிறோம்.

**திகதி: 31 ஜுலை 2020**

மலாக்கா-ஜோகூர் மறைமாவட்ட அனைத்து அருட்பணியாளர்கள், துறவற அருட்சகோதர-சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் அனைருக்கும்..
:

**முதலாவது:** மலாக்கா-ஜோகூர் மறை மாவட்டதில் சமீபத்திய கோவிட் -19 அச்சம்.

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து உரோமன் கத்தோலிக்க தேவாலயங்களில் பரிசோதனையும் ஆய்வும் செய்த பின்னர், அனைத்து அருட்பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், பங்கு ஊழியர்கள் ஆகிய அனைவரும் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர், 14 நாள் தனிமைப்படுத்தப்பட்ட உத்தரவை மலேசிய உடல்நல அமைச்சகம் (கே.கே.எம்) விலக்கியுள் ளது.

தொடர்ந்து, அனைத்து அருட்பணியாளர் களும் அலுவலக மற்றும் பங்கு பணியாளர்களும் பாதுகாப்பாக இருப் பதாக உடல்நல அமைச்சகம் அறிவித்துள்ளது. பங்கு சுத்திகரிப்பு சேவை பணிக்குழு அடுத்ததாக அனைத்து நிர்ணயிக்கப்பட்ட பணி நெறிமுறைகள் பயன்பற்றப்படுவதை உறுதி செய்யும்.

இந்த யனுமதியுடன், மலாக்கா-ஜொகூர்



*மலாக்கா-ஜோகூர் மறைமாவட்ட ஆயர் பெர்னட் பவுல்*

மறைமாவட்டத்தின் ஆயராக, அனைத்து தேவாலயங்கள், சிற்றாலயங்கள் மற்றும் திருப்பலி மையங்களும் வழிபாட்டுக் காகவும், அத்தோடு, அங்கீகரிக்கப்பட்ட கூட்டங்கள் (திருமணங்கள், இறுதி சடங்குகள்) யாவும் 2020 ஆகஸ்ட் 15, (சனிக்கிழமை), அன்னை மரியின் விண்ணேற்பு பெருவிழாவிலிருந்து மீண்டும் தொடங்கப்படுகிறது என்பதை அறிவிப் பதில் மகிழ்கிறேன்.

தயவுசெய்து நிர்ணயிக்கப்பட்ட பணி நெறிமுறைகளைப் (SOP) பின்பற்றுமாறு வேண்டுகிறேன். வெள்ளம் வருமுன் அணைபோடுவதே சிறப்பு.

**இரண்டாவது:** குருத்துக் கல்லூரியும் குருத்துவ மாணவர்களும்

பினாங்கு கோலேஜ் ஜெனரல் 4 ஆகஸ்ட், 2020 அன்று மீண்டும் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொற்றுநோய் பரவல் இன்னும் தொடர்வதால் மாணவர்கள் அருட்தந்தை லியோனல் தோமஸ் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் மஜோடி மையத்தில் இயங்கலை (ஆன்-லைன்) வாயிலாக கல்வியை அடுத்த அறிவிப்பு வரை தொடர்வார்கள்.

**மூன்றாவது:** ஆயரின் தகவல் தொடர்பும் வழிமுறைகளும்

மலாக்கா-ஜொகூர் மமைாவட்டத்தின் சமூக தொடர்பு நிலையத்துடன் கலந்துரையாடிய பின்னர், ஆயரின் தொடர்புக்கான ஒரு நெறிமுறை அமைக்கப்பட்டுள்ளது:

**நிலை 1:** F12 MJD செய்தி அலைவரிசை வழியாக: ஆயர் பேசுகிறார்.

**நிலை 2:** MJC வலைப்பக்கம் மற்றும் முகநூல் வழியாக: அதிகாரப்பூர்வ அறிக்கை பதிவேற்றம் செய்யப்படும்.

**நிலை 3:** அருட்பணியாளர்கள் மற்றும் துறவறத்தார் இல்லம் வழியாக PDF கோப்பு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் அனைத்து செய்திகளும் ஒரே நேரத்தில் வெளியிடப்படும்.

**நிலை 4:** ஆயர் பேசுகிறார்- F12 MJD செய்தி அலைவரிசை அண்மைய, உண்மையான, நம்பகமான செய்திக ளுக்கு, Friday @ 12 noon- ஆயர் பேசுகிறார் அலைவரிசையில் நாம் சந்திக்கலாம்.

அனைத்து முஸ்லீம் நண்பர்களுக்கும் இனிய தியாகத் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்றேன்.

கடவுள் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

ஒன்றிணைந்து இறையரசைக் கட்டுவோம்.

ஆயர் பெர்னட் பவுல்
மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டம்.

# வறுமைக்குரிய தீர்வாக அணுவாயுத ஒழிப்பு இருக்க முடியும்

**வத்திக்கான்:** ஜப்பான் நாட்டில் அணுக்குண்டு வீசப்பட்டதன் 75ம் ஆண்டு இந்த ஆகஸ்ட் மாதத்தில் நினைவு கூரப்படுவதையொட்டி, அனைத்து அணு ஆயுதங்களும் ஒழிக்கப்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளது, திருஅவையின் கொலம்பன் மறைபோதக சபை.

1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி, ஜப்பானின் ஹிரோஷிமா நகரிலும், 9ம் தேதி நாகாசாகி நகரிலும் அணுகுண்டுகள் வீசப்பட்டதன் விளைவாக, இரண்டு இலட்சத்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அப்போதிருந்தே, பல நாடுகள் அணு ஆயுத ஒழிப்பிற்குக் குரல் கொடுத்து வருகின்றன.

அணுக்குண்டு வீச்சால் பாதிக்கப்பட்டோர், மற்றும், அணு கதிர்வீச்சால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவரும் மக்கள் குறித்து கவலையை வெளியிட்ட, கொலம்பன் மறைபோதக சபை, இவை அனைத்திற்கும் ஒரே தீர்வாக, அணு ஆயுத ஒழிப்பு மட்டுமே இருக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு, அமைதி, மற்றும், நிலையான தன்மைக்குரிய மனித ஏக்கத்திற்கு அணு ஆயுதம் தீர்வைத் தரமுடியாது என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த ஆண்டு, ஜப்பானில் மேற்கொண்ட திருத்தூது பயணத்தின்போது எடுத்துரைத் ததை சுட்டிக்காட்டியுள்ள இந்த மறைபோதக சபை, இன்றைய உலகில், இலட்சக்கணக்கான குழந்தைகள் உண்ண உணவின்றி வாடும்போது, கோடிக்கணக் கான பணத்தை அணு ஆயுத தயாரிப்பு, மேம்பாடு, மற்றும், அணு ஆயுத வர்த்தகத்தில் வீணடிப்பது தவறு என்று திருத்தந்தை கூறிய வார்த்தைகளையும்



*ஜப்பான் பிரதமருடன் திருத்தந்தை*

மேற்கோள் காட்டியுள்ளது.

இன்றைய உலகில் பாதுகாப்புக் கொள்கைகள் என்ற பெயரில், பல நாடுகள் மேற்கொண்டுவரும் திட்டங்கள், உண்மை யில் மக்களின் வாழ்வுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலையையே உருவாக்கிவருகின்றன எனக்கூறும், இந்த கத்தோலிக்க மறை போதக சபை, மற்றவர்களைக் கொல்வதன் வழியாகவே பாதுகாப்பைக் கைக்கொள்ள முடியும் என்பதன் அடிப்படையாகக் கொண்ட இக்கொள்கைகள், மனிதரின் அடிப்படை வாழ்வுக்குத் தேவையான பொருளாதாரத் தையும் தங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றன என்கிறது.

# பகிர்தலும், ஒருமைப்பாடும், பிறர் மீதான பொறுப்புணர்வும்

**வத்திக்கான்**: புனித பேதுரு பெருங் கோவில் வளாகத்தில் விசுவாசிகள் குழுமியிருக்க, அவர்களுக்கு கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம் எடுத் துரைக்கும், அப்பம் பலுகுதல் புதுமை குறித்து நண்பகல் மூவேளை செப உரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தன் போதனைகளைக் கேட்க வந்திருந்து, மாலை வரை செவிமடுத்து, பசியுற்றிருந்த கூட்டத்தினரை ஊர்களுக்கு அனுப்பி விடுமாறு சீடர்கள் இயேசுவிடம் வேண்ட, அவர்களுக்கு நீங்களே உணவு கொடுங்கள் என இயேசு கூறியதைக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைவன் நமக்கு வழங்கியுள்ளதை நாம் அவர்களை காப்பாற்று வதற்குரிய பொறுப்பை நாம் ஏற்கவேண்டும் என்பதே இறைவன் நம்மிடம் விரும்புவது என்று கூறியத் திருத்தந்தை, நம்மை சுற்றியிருக்கும் ஏழை மக்களின் அடிப் படைத் தேவைகளைப் புறந்தள்ளிவிட்டு, அருளடையாளங்களை நாம் பெறுவது, முரண்பாடாக மாறுகிறது என்றார்.

தன் போதனைகளைக் கேட்க வந்து மாலை வரை பசியோடு காத்திருந்த மக்களுக்கு இயேசு காட்டிய கருணை, இயேசு அவர்கள்மீது காட்டிய அன்பின் உறுதியான வெளிப்பாடு என்பதையும் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.



பிறருடன் பகிர்ந்துகொள்ளக் கடமைப் பட்டுள்ளோம் என்பதை, இந்தப் புதுமை கற்றுத் தருகிறது என்றார்.

மக்கள் பசியுற்றிருந்த இந்நிகழ்வில், இயேசு தன் நண்பர்களுக்கு, அன்றும் இன்றும் கற்றுத்தர விரும்பும் பாடம் என்னவெனில், பகிர்வு மற்றும் ஒருமைப்பாடு குறித்த இறைவனின் சிந்தனையோட்டம் என்றார் திருத்தந்தை.

இங்கு இறைவனின் சிந்தனையோட்டம் என்பது, நாம் பிறருக்காகப் பொறுப்பேற்க வேண்டும் என்பதேயாகும் என சுட்டிக் காட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மற்றவர்கள் குறித்து நாம் நம் கைகளைக் கழுவி விடவேண்டும் என்பதோ, அவர்களைக் குறித்து அக்கறையற்றிருக்க வேண்டும் என்பதோ இறைவனின் சிந்தனையோட்டம் அல்ல, மாறாக, நம் ஆன்மீக உணவாக வரும் திருநற்கருணையை நாம் அணுகும்போது, இயேசு இக்கூட்டத்தின்மீது கொண்டிருந்த அதே மனநிலையோடு அணுகவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பசி, போன்றவை குறித்த செய்திகள் அதிகமதிகமாக வந்துகொண்டிருக்கும் இன்றையக் கால கட்டத்தில், இறைவனின் தந்தைக்குரிய அணைப்பில் நம்பிக்கைக் கொண்டு, துணிவுடன் பிறரோடு பகிர்வதற்கு நாம் முன்வரவேண்டும் என அழைப்புவிடுத்தார்.

கருணை என்பது, ஒரு பொருள் சார்ந்த உணர்வல்ல, மாறாக, மற்றவர் மீது கொண்டுள்ள ஆர்வத்துடன் பகிர்வதாகும், அதுவும், போர், பசி என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கும் காலகட்டத்தில், நமக்குள்ளதைப் பிறருடன் பகிரக் காத்திருக்கிறோமா என்ற கேள்வியை கேட்கவேண்டும் எனக் கேட்டுக்

# சமுதாயம் என்ற உடலில், மனித வர்த்தகம் ஒரு காயம்

**வத்திக்கான்**: ஒவ்வோர் ஆண்டும், ஜூலை 30-ஆம் தேதியன்று, மனித வர்த்தகத்தை எதிர்க்கும் உலக நாளும், நட்பின் உலக நாளும் சிறப்பிக்கப்படுவதால், இவ்விரு கருத்துக்களையும் மையப்படுத்தி, திருத் தந்தை, இரு டுவிட்டர் செய்திகளைப் பதிவுசெய்திருந்தார்.

*"இன்றைய மனித சமுதாயம் என்ற உடலில், மனித வர்த்தகம் ஒரு காயமாக தொடர்ந்து வருகிறது. விற்பனைப் பொருள்களாக மாற்றப்பட்டுள்ள*




*மனிதர்களை விடுவிக்க உழைத்துவரும் அனைவருக்கும் நான் மனமார்ந்த நன்றி கூறுகிறேன். இன்னும் செய்ய வேண்டி யவை அதிகம் உள்ளது!"* என்று திருத்தந்தை கூறனார்.

2014-ஆம் ஆண்டு முதல், உலகெங்கும் சிறப்பிக்கப்படும் மனித வர்த்தகத்தை எதிர்க்கும் உலக நாளுக்கென, இவ்வாண்டு, *"மனித வர்த்தகத்தை முடிவுக் குக் கொணர முன்னணியில் இருந்து செயலாற்றுதல்"* என்ற மையக்கருத்து தெரிவு செய்யப்பட்டது.

**நட்பின் உலக நாள்**

நாடுகள், கலாச்சாரங்கள் ஆகியவற்றின் இடையே பாலங்களை எழுப்பும் ஒரு முயற்சியாக, 2011-ஆம் ஆண்டு முதல், ஐ.நா.அவை சிறப்பித்துவரும் நட்பின் உலக நாளுக்கென திருத்தந்தை, கடந்த வியாழனன்று, தமது இரண்டாவது டுவிட்டர் செய்தியை வெளியிட்டார்.

"நட்பு என்பது, வாழ்வின் கொடை, மற்றும் இறைவனின் கொடை. கடினமான நேரங்களில் நம் அருகிலிருக்கும் உண்மையான நண்பர்கள், ஆண்டவரின் பரிவு, ஆறுதல் மற்றும் அன்புநிறை பிரசன்னத்தை பிரதிபலிப்பவர்கள்" என்று திருத்தந்தை மேலும் கருத் துரைத்தார்.





## உறவாடும் குடும்பம்

அன்பார்ந்த இறைமக்களே! கடந்த ஏப்ரல் 2020 தொடங்கி, ஜூலை 2020 வரை Covid-19-ன் காரணமாகத் தடைபட்டிருந்த நமது உறவாடும் குடும்பம் மாத இதழ், இம்மாதம் ஆகஸ்டு தொடங்கி வெளியீடு காண்கிறது என்பதை அறிவிப்பதில் மகிழ்கிறோம்.

தயவுசெய்து உங்கள் பங்கு 'உறவாடும் குடும்பம்' பொறுப்பாளருடன் தொடர்புகொண்டு உங்கள் இதழைப் பெற்றுக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். நன்றி


# ஆண்டவரின் அருட்கரம் ஆறுதல் அளிக்கும்

பொதுக்காலம் 19 ஆம் ஞாயிறான இன்று, நமக்கு வழங்கப்பட்ட இறைவார்த்தைகளை நாம் தியானித்தோமென்றால் "துணிவோடி ருங்கள், நான் தான் அஞ்சாதீர்கள்" என்ற சொற்றொடர் வாழ்வு தரும் வார்த்தையாக நமக்கு மிகவும் நம்பிக்கையைத் தருகிறது.

இன்றைய வாசகங்களில் எலியா இறை வனை மெல்லிய காற்றில் சந்திப்பதும், திருத்தூதர் பவுல் இஸ்ரயேல் மக்களிட மிருந்தே மீட்பர் தோன்றினார்; அவர்கள் மீட்பு அடைய வேண்டும் என்று அவர் விரும்புவதையும் பார்க்கிறோம்.

நற்செய்தியில் பேதுரு, இறைமகன் இயேசுவைப் போல் நடக்க எண்ணி, அதில் தடுமாறும்போது, ஆண்டவர் இயேசு அவரின் கையைப்பிடித்துக் காப்பாற்றி நம்பிக்கைத் தரும் வார்த்தைகள் தருவதையும் வாசிக்கக் கேட்கிறோம்.

இன்றைய உலக சூழ்நிலைகளில், இயேசு சொன்ன "துணிவோடிருங்கள், நான் தான் அஞ்சாதீர்கள்" என்னும் வார்த்தைகள் நம்முடைய அனுதின வாழ்க்கையில் நம்மைத் தேற்றும் வார்த்தைகளாக அமைகின்றன. நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்னைகள், இன்ப துன்பங்கள், மெல்லிய காற்றைப் போலவும் வரலாம்; மூழ்க வைத்து கீழே தள்ளும் அலைகள் போலவும் வரலாம். ஆனாலும் ஆண்டவரின் பேரன்பால் நாம் மீட்படைவோம் என்று திருப்பாடல் ஆசிரியர் நமக்கு நம்பிக்கையூட்டுகின்றார். அவரின் குரலைக் கேட்டு நடந்தால், நிறைவாழ்வு உண்டு என்று வாக்களிக்கின்றார். அவர் தம் அடியார்க்கு நல்லதையே அருள்வார்; இதுவே இன்று நம் ஆண்டவர் நமக்குத் தரும் நற்செய்தி.

நாம் இறை நம்பிக்கைக் கொண்டு, மீட்படைந்தால் மட்டும் போதாது; நம்மோடு இணைந்து நம் குடும்பமும், நம்மைச் சார்ந்தவர்களும் இறைவனின் முடிவில்லா வாழ்வில் பங்கு பெற நாம் உழைக்க வேண்டும்;

மக்களின் பசியைத் தீர்த்த இறைமகன், தம் விண்ணகத் தந்தையோடு உரையாட தாமே வாய்ப்பை ஏற்படுத்துகின்றார். சீடரைப் படகேறித் தமக்குமுன் அக்கரைக்கு செல்லுமாறு கட்டாயப்படுத்தினார் என்று வாசிக்கிறோம்.. ஏனென்றால் தம் தந்தையோடு தனிப்பட்ட ஒன்றிப்பு அவருக்குத் தேவையாய் இருந்தது. இயேசுவின் இந்தச் செயல் நமக்குக் கூறுவது; பரபரப்பான நம் வேலைகளுக்கு மத்தியிலும், கடவுளோடு தனிமையில் உறவாடுவது மிகவும் இன்றியமையாதது; அதற்கு நாம் தான் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

கடல்மீது நடந்த பேதுருவை அலைகள் மூழ்கடிக்கும்போது, அவர் கூறிய வார்த்தைகளான, "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்ற தாரக மந்திரத்தை நாமும் ஒவ்வொரு சோதனை நேரத்தின் போதும் ஆண்டவரை நோக்கி எழுப்பினால், கண்டிப்பாக, அவர் நம் கரம்பிடித்து, " நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்? என்று கடிந்துகொண்டு, நம்மை மூழ்க விடாமல் காப்பார்.

இயேசு படகில் ஏறியதும் காற்று அடங்கியது என்ற வார்த்தைகள், நம் வாழ்க்கை என்னும் படகில் இயேசுவை ஏற்றிக்கொண்டேமானால், நம் படகும் அலைகளின் நடுவே தத்தளித்தாலும், துயரம், நோய், பணப்பற்றாக்குறை, பெருஞ்சுமைகள் ஆகிய பெருங்காற்று நம்மைச் சூழ்ந்தாலும், அதைத் தம் வல்லமையாலே கடிந்துகொள்பவரும், அமைதியைக் கொண்டு வருபவருமான நம் இயேசு நம் கூட இருக்கிறார்.

நம் இயேசு என்னோடு, நம் படகில், நம் வாழ்க்கையில், நம்மோடு இருக்கும்போது ஏன் வீண் கவலை?

*-ஜோசப்பின் போஸ்கோ- சிரம்பான்*

**பொதுக்காலம் 19-ஆம் ஞாயிறு**

அர 19: 9a, 11-13a
திபா 85: 8ab,9. 10-11. 12-13 .
உரோ 9: 1-5
மத் 14: 22-33

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 3**